DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 100/2020

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சதிஷ்குமார் |
| Father / Husband Name | ராஜசேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.12.2024.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் வந்துள்ளேன். நான் கரூர் வைஸ்யா மதுராந்தகம் வங்கியில் கிளை மேளாலராக பணி புரிந்து வருகிறேன். நான் ஏப்ரல் 2024– லிருந்து கரூர் வைஸ்யா மதுராந்தகம் வங்கியில் கிளை மேளாலராக பணி புரிந்து வருகிறேன். எதிரி சுகண்யா கரூர் வைஸ்யா மதுராந்தகம் வங்கியில் உதவி கிளை மேளாலராக பணி புரிந்தவர். எத்தனை காலம் பணிப்புரிந்தார் என்று தெரியாது. எதிரி எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். எப்போது தொடங்கினார் என்று தெரியாது. வாதி ஜோதிகா எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். வாதியின் கணவர் முத்துகிருஷ்ணன் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரையிலான முத்துகிருஷ்ணன் மற்றும் சுகண்யா ஆகியோர் எங்கள் வங்கியில் வங்கி கணக்கு ஸ்டேட்மென்ட் கொண்டுவந்துள்ளேன். **(முத்துகிருஷ்ணன் வங்கி கணக்கு ஸ்டேட்மென்ட் எசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (எதிரியின் வங்கி கணக்கு ஸ்டேட்மென்ட் எசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**2.** எதிரி முத்துகிருஷ்ணன் என்பவருக்கு ரூபாய்–2 லட்சம் பணம் பரிவர்தனை செய்துள்ளார். ஆன்லைன் மூலம் பணப்பரிவர்தனை செய்தது நான் கொண்டுவந்த வங்கி கணக்கு ஸ்டேட்மென்டில் தெரியாது. ஆன்லைன் மூலம் செய்யப்பட்ட பணப்பரிவர்தனை ஸ்டேட் மென்ட் கொண்டுவர எனக்கு கால அவகாசம் வேண்டும்.

**(ஆவணங்கள் கொண்டுவருவதற்காக முதல் விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**